ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1902/42 - 2015 පෙබරවාරි මස 18 වැනි බදාදා - 2014.02.18

*1902/42 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மத்திய மாகாண மாகாண சபை**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இணைந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது சரத்துடன் வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) ஆவது சரத்தின் கீழான அறிவித்தல்*

வட மத்திய மாகாண மாகாண சபையின் முன்னைய முதலமைச்சர் மற்றும் மாகாண சட்டமும் ஒழுங்கும், நிதியும் திட்டமிடலும், உள்ளூராட்சி, மாகாண நீர்ப்பாசன, மாகாண காணி, மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமரகோன் முதியான்சலாகே ரன்ஜித் சமரகோன் அவர்களினால், திம்புலாகல பிரதேச சபையின் தலைவர் சிங்களகே ஜகத் சமரவிக்ரம அவர்களினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 185 (1) ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட அல்லது சகலதும் புரியப்பட்டுள்ளன என்பது தொடர்பாக திருப்தியடைவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (2) ஆம் சரத்துக்கு ஏற்ப நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற சட்ட உத்தியோகத்தர் ஆகிய கே. சுனில் பெரேரா அவர்களின் விசாரணை அறிக்கை எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்விசாரணை அறிக்கைக்கு ஏற்ப திம்புலாகல பிரதேச சபையின் தலைவர் சிங்களகே ஜகத் சமரவிக்ரம அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) ஆம் சரத்திற்கேற்ப குற்றம் புரிந்துள்ளார் என நிரூபிக்கப்பட்டுள்ளதால் மற்றும் அது தொடர்பாக திருப்தியடைந்ததன் பின்பு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) i மற்றும் ii ஆம் சரத்துகளுக்கேற்ப உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப வட மத்திய மாகாண மாகாண சபையின் பொலன்நறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச சபையின் தலைவராகிய சிங்களகே ஜகத் சமரவிக்ரம அவர்கள் தலைவர் பதவியிலிருந்தும் அங்கத்தவர் பதவியிலிருந்தும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளார் என்பதை அறிவிக்கின்றேன்.

சுதசிங்க முதியன்செலாகே பேசல ஜயரத்ன பண்டார,
வட மத்திய மாகாண முதலமைச்சர் மற்றும் வட மத்திய மாகாண
சட்டமும் ஒழுங்கும், நிதியும் திட்டமிடலும், உள்ளூராட்சி, மாகாண வீதி
அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், விசேட செயற்றிட்டங்கள்,
சுற்றுலா, கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சர்.

வட மத்திய முதலமைச்சு அலுவலகம்,
முதலமைச்சு,

*2015, பெப்புருவரி 18.*

*3- 110*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.